உ

முருகன் துணை

# முருகர் ஒயிற் கும்மி

## விநாயகர் துதி

மந்திரசடாட்சர சண்முகவிலாச
மணந்தவள்ளிச்சரிதையெனும் வண்மைதன்னை
விந்தைதருமொயிற்கும்மி சங்கீதமாக
மேதினியோர்படித்தெழுதி மிகக்கொண்டாட
பைந்தமிழாலடியேன்யா னுரைத்தபுன்சொற்
பகருமொழிக்கருள்புரியும் படிமன்ற
சந்தாஞ்சேர்திடமான வருட்டுறைக்கூட்டுந்
தும்பிமுகக்கணபதியே துணைசெய்வாயே.

## கும்மி

தென்பரங்குன்றினில் மேவுங்குருபர தேசிகன்மேற் கும்மிப் பாட்டுரைக்க, சிகாத்திரு மகரக்குழை சிகமெய்ப்புகர் வடிவைத் தருந் தில்லைவிநாயகன் காப்பாமே. 1

வள்ளியெனும்பசுங் கிள்ளையைக்கந்தன் மருவுங்கதையைக் கும்மியாக, வாழ்வுற்றிட நாவிற்றுதி மேவித்தருள் பாவித்திடும் வாலை மனோன்மணி தாடுணையே. 2

சங்கரசம்பு சதாசிவனீன்றருள் சண்முகர்மேற் கும்மிப் பாட்டுரைக்க, தந்தக்கனி முந்தக்கிரி வந்தித்தருள் விந்தைக்குரு தந்தி முகவன் துணையாமே. 3

மந்திரபூரணக் கந்தனைவள்ளி மணந்தசரிதை வகையறிந்து, வாசத்துடன் தேசப்பிர காசத்தமிழ் பேசப்புகழ் மண்டலமெங்கும் நிறைந்திடவே. 4

தேகஞ்சிறந்த குயில்மொழியைக்கண்டு காகந்தொனிசெய்த வாறதுபோற், சிந்தைக்கனி விந்தைப்பிர பந்தத்தமி ழுந்தத்துடன் செப்புகிறேனொரு புல்லறிவேன். 5

காரிகைநன்னூ லிலக்கணங்கற்று கவிசொல்லும் நாவலர் தங் கண்முன்னே, கல்லாதவன் இல்லாதவன் வல்லானென்மையாய்ச் சொல்லும்பிழை கற்றறிந்தோர்கள் பொறுப்பீரே. 6

வாணிதமிழ்சித் தாத்திரிவருட மகாதிங்களேழ்த்தேதியினின், மறையோன்குரு விறையோன்தரு முறைதங்கிய நிறையன்பதி மாணகரில்நன் னகர்வாசன். 7

வில்வகுலத்தி லுதித்தெழுந்தவேங்க டாசலமைந்த நுரைத்த கவி, விழையுந்தமிழ் தழையுங்கன இனியுஞ்சிவ கழைந்தரும்வேலன் கிருபைசெய் வார்நிசமே. 8

ஓங்கியநாகம் படம்விரிக்கக்கண்டு நாங்கூழுங்கூடமின் முடுதல் போல், உலகந்தனி லிவருந்தமிழ் நூல்கண்டவ ரில்லையங்கொரு ஊமைகண்ட கனவதுபோல். 9

விசும்புகழ்தழைத் தோங்கிடவேவில்வ வேதகுலத்தில் தண்ட மிழ்க்கு, வேலன்குண சீலனுமை பாலனநு கூலன்செய் வேணு மெந்நாளுந் துணைநமக்கே. 10

ஆழிப்பெருங்கடல், வெள்ளத்துக்கொப்பனை யாகசிறவாய்க் கால் பாய்ந்ததுபோல், யானுங்கவி யேனென்பெரு தேனுங்கனி போலுஞ்சொல வாறுமுகப்பெரு மாள்துணையே. 11

மட்டடங்காதசெந் தாமரைப்பொய்கையில் கொட்டியொரு புறம் பூத்ததுபோல், வாசன்புகழ் நேசன்நிகழ் தேசந்தனி வேசம் பிரமாகவேசங்கீதக் கும்மிசொல்ல. 12

முத்துபவளமுங் கோர்வைசெய்தாற்போற் சித்தமகிழ்ந்துநன் முகவுமே, முன்னோர்தமிழ் சொன்னமொரன வென்னுளைசயி விந்நா ளிலே மொழியுங்கல்விக் கருள்புரிவீர். 13

ஆதியந்தமுதற் காரணந்தன்னை யறிந்துநன்முகத் தெரிந்துரைப் பார், ஆடிப்பணி சூடித்தமிழ் பாடிக்கன வேடிக்கையி னானந்தங் கொண்ட ததிசயமே. 14

வையப்புகழுங் கலைமுனிவன்சிவ மந்திரவேள்வி மலைக்கருகே, மவுனக்குலகை யதனிற்சிவ தவமுற்றிய கவனத்தொடு மாத்திரைக் கோலுந் துலங்கிடவே. 15

கையிற்பிடித்த திருவோடுகறை கண்டமுங்காதினிற் குண் டலமுங், காணிற்றிரு மேனிக்கொரு காவிக்குடைசோபித்திட காரணமாய்த்தவஞ் செய்தாரே. 16

ஜானகிமுன்வந்த மானதுபோலத் தவமுனிவன்தனைச் சேர வென்று, தாகக்கனை வேகத்திடுதேகத்திலே மோகித்திடு தார்வனத் தன்னி லொருமானும். 17

பொன்னிறங்கொண்டு புளகிதமாய்மேனி பூரித்துப்பால்ய பிராயமதாய், பூவைக்குரல் கூவித்தவ வேள்விக்கிரி மேவிக்கன போகப்பிழைத்திட வந்ததுவே. 18

வந்ததைக்கண்டு கலைக்கோட்டுமாமுனி சிக்கெனவங்கித் தியங்கி வனம், வதனக்குளிர் விதனத்திலே மருவிச்செப லூருகித்திரு மானை மருவிக் கலந்தாரே. 19

மங்காமலேரிஷி கர்ப்பமிலைப்போதுந் தங்காதென்றே சொல்லும் வாறதுபோல், மதிவயச்சிவ கதிவைத்தரு மதலைக்கனி யதை வைத்திடல் வள்ளிக்குழி தனி லீன்றதுவே. 20

மானீன்ற பெண்ணந்த கானகந்தனிலே வண்ணமணிக் குரல் ஓசையிட்டு, வாலைக்குயில் மானுக்குல நிலபயிலுஞ்சோபிதம் மதலை வாய்விட் டழுததுவே. 21

தேனுங்கனியுங் கிழங்கெடுக்கவென்று தேடியவேடர் வரும் வழியிற், செடியிற்றூ வடிவைத்தா லடிவைத்திட நடுவிற்சிறு செல் வியைக் கையி லெடுத்தனரே. 22

கையிலெடுத்தான் குகவுமேயந்தக் கானவர்சேரியிற் கொண்டு சென்றார், கனியற்புத மினியைப்புகழ் மனிதற்புத வனிதைக்குற காரணமாக வளர்த்தாரே. 23

ஆணிப்பவளக் கயிர்முறுக்கியதி லந்தமுள்ளசிறு தொட்டில் கட்டி, ஆசைக்குரலோசைத்தமிழ் பாஷைப்பல பேசித்தன மன்புட னின்றுதா லாட்டினரே. 24

ஆரீரோபெண்ணே யாரீரோகண்ணே யாராரோ நீயாரோ கனித்தரு பழனக்கழை யிளவற்புத வளமைத்தமிழ் நாயகமே பெண்ணே கண்வளராய். 25

அன்னமே தேனேயென் கண்ணே மின்னேயென்று ஆவலு டன்கையில் தானெடுத்து, அணிபொற்கலை மணிவச்சிர புனிதத் தோடு வனிதைக்கணி யாசிவெகுபூஷ ணுதியிட்டார். 26

கொஞ்சிமதலையை முத்தமிட்டுமிகக் கோலப்பணிகள் மிகப் பூட்டி, கொத்துச்சர முத்துப்பணி வைத்துப்பதி சித்துப்பெயர் கொண்டுகுறவர் மகிழ்ந்தாரே. 27

ஒன்றிரண்டாகி மூன்றுகிவய தோரைந்துதிங்களுந் தானுகி ஓடித்தெரு வீதிக்குளே வேடச்சிகள் கூடித்தின வோகியமாக வளர்ந்தாரே. 28

மாதுவளரும் வளர்ச்சிகண்டே நம்பிமன்னனுமே மங்கை மாதரசும், மங்கைச்சிமிழ் கொங்கைக்குயில் தங்கப்பணி அங்கத் திட வள்ளியம்மனென்று பேருமிட்டார். 29

காதுகுத்திபஞ்சு தங்கையிட்டுச்சின்ன காதுக்குக்காளாழி பிலியிட்டு, கதியிக்கிலை மதியைப்புலை கமலத்திரு வதனத்திலே கன்னத்தைக் கொஞ்சியே முத்தமிட்டார். 30

பாடகந்தண்டை சிலம்பணிந்தார் பதக்கஞ்சுட்டி நுதற்கணிந்தார், பட்சத்தொடு மெச்சிப்புகழ் வச்சிரப்பணி பிச்சைப்பட பாவித்து நன்றாய் வளர்த்தனரே. 31

மங்கையுமிப்படி வேடுவர்சேரியில் வாசிபங்கொண்டு வளர்ந்திடுநாள், வரிசைத்துரை மகளுக்கொரு மழையற்புத வரையிற்கன மாரியெந்நாளும் பொழிந்தனவே. 32

வெள்ளிமலைச்சார லோரத்திலேதினை விதைக்கநலம் நிலம் பார்த்து, வெட்டுப்பயி ரிட்டுத்தளிர் மிட்டுக்கதி ரெட்டும்படி வேடுவரும்புனற் காடுசெய்தார். 33

காடுவிளைத்துப் பயிராகிதினைக் கதிரும்வாங்கி மணிபிடித்துக், காவிக்கிளி கூவித்தினை மேவிக்கதி சேவித்திடக் கண்டந்த வேடர் கவலை கொண்டார். 34

தந்தையுடன் மைந்தர் வந்துநின்று நம்பி தங்கையெனும் வள்ளி நாயகியைத், தனதாகிய அனைமீறியே தினைதூவியே புவிமீதிலே தங்கையுடன் காவல் வைப்போமென்று. 35

என்றண்ணமார்கள்சொற் றட்டாமலேயந்த வேந்திழை வள்ளி சந்தோஷமதாய், இன்பக்கட றென்புற்றெரு சம்பிரமத்துட னம்பிக்கையோ டேந்திழையு முயிர் பாங்கியுமாய். 36

சீருந்தினைவனந் தன்னிலுயர்பர ணேறிநின்றுகைக் கவண் வாங்கி, நீலக்கிளி போலப்பட கோலைத்துயின் மேலுக்கிட னின்று விடைகொண் டெறிந்தாளே. 37

பூரணவேள்வி மலைச்சார்பில் வள்ளி பொங்குதினைப்புனங் காக்கையிலே, புவனத்திலே தவமுற்றிய கவனக்குறு முனியற்புத பொதிகைமாமலை விட்டிறங்கி. 38

கந்தனிருக்குந் தலந்தோறுஞ் சென்று கபடநாதன் சேர்வை செய்து, காவித்திரு வேள்விக்கிரி சோபித்திட மேவிச்சிவ காரண மாமுனி வந்தாரன்றே. 39

ஆலோலமாலோல மென்றுசொல்லிவள்ளி ஆனந்தமாகக் கவணெறிந்தால், அசையத்தன மசையக்குட மிசையக்கன விசையிற் றெரு வாலைக்குரன்மணி யோசை செய்தாள். 40

ஏகலாப நாதன்றனிது வேதோவதிசயந் தானெனவே, இந்தக்குரல் சந்தப்பட வந்தத்தொடு விந்தைத்தொனி யிதுவும் பெண் குரல் தானென்று. 41

யோகத்திலேகண்ணை மூடிநின்றூர்சிவ யோகியெனுந் தவ மாமுனிவன், யோசித்ததை நேசித்தனங் கூசிப்பிர காசத்துட னெண்டொடி வள்ளியைக் கண்டாரே. 42

பூரணவாலை மனோன்மணியோ இவள் பூலோக ரம்பையோ பொன்மகளோ, புவனத்திலோ இவளுக்கிணை எவளச்சரி தகு மொப்பிட மண்டலத்திலுங் கண்டறியோம். 43

என்றுமுனிவன் பரணைதிரோதின்று எத்திழைவள்ளி தனைப் பார்த்து, வேதப்பிர வாகக்கட லாசைப்பரி தாபத்தொடு வேறு வயனமெடுத்துரைப்பார். 44

பேரென்னவென்ன தம்மா நீசொல்லு பேதையரே பசுங் கோதையரே, பிரமித்துள மகிழக்குற மாபிற்சன வாமுற்றனை பெற்றிடுந் தாய்தந்தை பேர் சொல்வாய். 45

சொல்லுவேன் கேளையா மாமுனியே நாங்கள் சொற்றவறுத குறச்சாதி, சொந்தக்கிளை பந்தத்தவ மிக்கக்கிரி விந்தைப்புகழ் சூழுஞ் சிற்றூரங் குடியிருப்போம். 46

தந்தைநம்பிராஜ னெங்களையா வெந்தன் தாய்பேருநங்கை யென்றே சொல்லுவார், தவமுற்றிய சிவசுந்தர மவுனத்தொடு புவனந்தனில் சாமித்திருநாமஞ் சாற்றுமென்றான். 47

நானிலமெங்கும் புகழ்படைத்தவள்ளி நாயகியேசொல்லக் கேளுமம்மா, நாதம்பெற கீதம்பெற வேதங்களை யோதும் புகழ் நாரதனென்று பெயருரைப்பார். 48

கேளுந்தினைவனம் வாழ்மயிலேயுனக் கேத்த மணவாளன் பார்த்து வந்தேன், கிருபைக்கடல் தருசுப்பிர மணியத்துரை யுனை மெச்சியே கிஞ்சுகம்போலடி கொஞ்சிடவே. 49

வேதமுனிசிவ ஞானத்திலேயும்மை மெத்தப் பெரியோரென்றேபொறுத்தேன், விகடத்தொழில் சகடத்திலே புகழக் கெடின் மகுடச்சடை பிறுசக்கொண்டு முடித்தாயே. 50

கந்தனைமேவிக் கலந்ததனாலுன் களங்குறைவாமோ குறக் கொடியே, கள்ளத்தொழி லுள்ளத்திலே எள்ளத்தனை விள்ளத்தகா கபடமென்று நினையாதே. 51

வேதஞ்சிறந்த தவமுனியே யுந்தன் வித்தைகளென்னிடஞ் செல்லாது, மெட்டுப்பயி லொட்டுக்குனி விட்டுக்கதை கட்டுக்கடை மேன்மைக் குறக்குல நாமல்லவோ. 52

தேசங்கடோறுங் குறம்பாடிக்கொண்டு திரியுமெங்கள் குறச் சாதி, சின்னத்தொழி லெண்ணத்திலே யுண்ணிக்குலம் பின்னப்பட செருக்குலைந்த தறியேனே. 53

தாறுமாறாய்மொழி பேசாதேயுன்னைத் தவமுனியென்றுஞ் சொல்வாரோ, சாதித்தலம் பேதித்திட வாதித்தெனை யேதிப்படி சற்றுமறியாமற் பேசுகிறாய். 54

தன்னுமெருத பொதிகைமத்தனை தொல்லுலகோர் சொல்லக் கேட்டிலையோ, சோரத்தன பாரத்திலே சோத்திலே தாயுற்றவர் சுப்ரமண்யக்கந்த நாதனல்லவோ. 55

ஆர்சொன்னாரிம்மதி நாரதனேயிந்த வழகில்லாச் சொல்லை யெடுத்துரைத்தாய், அடமுற்றொரு கடனத்தொறு முடமுற்றியர் தடமிட்டிடு மப்புறம்போயிங்கே நில்லாதே. 56

வாலசரவண மேலனுனக்கேத்த மாப்பிள்ளை தான்வள்ளி நாயகியே, வனமிகுத்தொளி ரிங்கிதத்திரு மங்கிலியத்துட னுன்கழுத்திலே மாலையிடநல்ல வேளையிலே. 57

மெய்யன்புகொண்டசன் யாசியென்றேயிந்த வேளைமட்டுஞ் சும்மா நான்பொறுத்தேன், மிஞ்சுக்தொழில் வஞ்சக்தா செஞ்சக் தஞ்சும்படி வேடர்கள்தேடி வருவாரே. 58

வள்ளியெனுஞ்சிறு பெண்ணேயுனக்கந்த மாப்பிள்ளைவேலனே தான்சரியாம், மாலுஞ்சுக வேலும்விழி மேலுந்தனத் தாலுந்தா தாதகனக்காலம் வரவில்லையோ. 59

ஆரணியந்தனி லொருகொடியிலெந்த வண்ணமாரேழ்வருந் தான்வருவார், அய்யாவெகு திடமாயுயிர் படவேதனை தொடுவார் உயிர் அப்புறம்விசனப் படவேண்டாம். 60

நல்லசுபதின வேளையிலேயுனை நாதன்சிவகிரி வேலனுமே, நாளைக்கலி யாணஞ்செய்ய மேளத்தொனி தாளத்தொனி நாதன் வேடிக்கை பார்ப்பேனென்றார். 61

விண்சம்பிரதாயம் படியாதேயிங்கே வேறேதொழி லில்லையோ முனியே, வேசைப்படல் பொய்பேசற்சன் யாசிக்கிது ரேசிக்குமோ விண்ணாட்டொராத மாமுனியே. 62

எந்தவிதஞ்சொல்லி வள்ளிக்குச்சம்மத மில்லையென்றேமுனி தானிலைத்து, ஒங்குப்பிர சங்கத்தா வெங்கண்ணழல் பொங்கும்படி ஏங்கினார் மூச்சை தாங்கினார். 63

செல்வக்குறமின் திருவடிவைக்கொண்டு சித்திரமடவெழுத வென்றே, சிந்தித்தவன் கந்தர்க்கிளை பந்தத்தொடு சொந்தப்பட சேரும்படியாய் முடிக்கவென்று. 64

பாதாதிகேச முதற்கரிகத்தம் பரிந்தோடிவள்ளைத் திருவழகைப், படியைத்திரு முடியைச்சுக மடவிற்கரு வெளியைத்தரு பார்த்து நன்றாக வரைந்தாரே. 65

கார்நிறங்கொண்ட குழலெழுதியதிற் கமலமல்லிகைப்பூ வெழுதி, கருணைப்பெறு நுதலிற்புகழ் கமலத்திரு வழகைச்சரி கண்டுமனமுங் கலந்தெழுதி. 66

வேல்விழிக்கஞ்சன மையெழுதியதின் மேலேதனுசு நுதலெழுதி, விசைப்புகழ் தேசந்திகழ் வாசன்பிர காசந்தர மேலேயதிலொரு பொருட்டெழுதி. 67

வள்ளைத்தண்டைபோலே காதெழுதியதில் வச்சிரதோங்கல் முருகெழுதி. மாரன்குயில் கூறந்தொனி மீறும்படி சேருஞ்சுக மன்மத பார்வையுங் கண்டெழுதி. 68

செண்பகப்போல் நாசி கண்டெழுதியதிற் சிங்காரமூக்குத்தி தானெழுதி, செப்புங்கனிக் கொப்பென்னவே தக்கோர்சொலும் மிக்கோருனை சிவந்தவதரமுங் கண்டெழுதி. 69

மோகனமுத்துப்போல் பல்லெழுதியதில் முல்லையரும்பு நகையெழுதி, முனிவோர்களு மினிதாயொரு மனதாகிய கனிபோலவு மோகித்திருந்தும் படியெழுதி. 70

காமன்கணைதீட்டுஞ் சாணையைப்போலங் கபோலமிரண்டையுங் கண்டெழுதி, கதியஞ்சுவை மதிபுத்தர முதிருஞ்சுவை மதுரம் நிறைகன்னிக்கமுகின் கழுத்தெழுதி. 71

கச்சணிகும்பத் தனமெழுதியதற் காதல்ரசத்தைக் கலந்தெழுதி, கண்டஞ்சவே நின்றும்புகழ் கொண்டுஞ்சுக மண்டும்படி கழையைப்போலிரு தோளெழுதி. 72

தங்கப்பணிகள் மிகவெழுதியதிற் சங்குமணியைக் கலந்தெழுதி, நாகத்தொடு மோகங்களைத் தேகத்திலே மோகித்திட சம்பிரம ரேகை கண்டெழுதி. 73

மால்கண்வளருந் தளிரதுபோல்நல்ல வயிறுமுந்திச் சுழியெழுதி, மாரன்கணை மீறுங்கன தேறுந்திரு நாதந்தர மதனசன்னங்கடாமெழுதி. 74

கஞ்சமலர்க்கர மூரண்டெழுதியதிற் காந்தளம்பூவைக் கலந்தெழுதி, காணக்குற மானைத்திரு மேனிக்கழ காவைத்தொரு கற்பனையாயிடை கண்டெழுதி. 75

ஆசைவினையுங் களஞ்சியத்தைப்பா மானந்தமாகிய தேன்கூட்டை, ஆருங்கனி கூறுஞ்செயல் தேறுஞ்சுக மீறும்படி யந்தரங்கத்தையுங் கண்டெழுதி, 76

வர்ணச்சரிகைத் துயிலெழுதியதின் மாதளம்பூவைச் சிறந்தெழுதி, மடமாதர்கள் நிறமீறியே துடைதானொரு படமீதிலே வாழைநிகர்த்திடம் தானெழுதி. 77

நண்டைப்போலேமுழந் தாளெழுதியல் நல்லவிராற்கெண்டைசேத்தெழுதி, நளினத்திரு வடிவைச்சொல்லு மொழியைத்திகழொளிவைத்தொருநான்முகன்புத்தகம் போலெழுதி. 78

வள்ளியழகைச் சுகமடலிற்கண்டு மகிழ்ந்து நாரதமாமுனிவன்,
வாசனுக்கும் நேசனைக்கிவ னேசமுற்றது வேகமகத்துவ மந்திரக்
கந்தனுக் கோதவன்றே. 79

வெள்ளிமலைப்புனம் விட்டகன்றேயந்த வேதமறைமுனி நாரக்
னும், விந்தைக்கிரி மைந்தர்கொரு கந்தர்க்கிவ ளந்தக்குயில் வேடித
கையாய்வழி கூடிச்சென்றார். 80

சித்திரமடலைக் கையிலேந்திக்கொண்டு சென்று முனிவன்
விரைந்தேகி, சேவற்கொடி கூவத்தினஞ் சோபித்திடும் வாழ்வுற்
றிடுஞ் சிவகுமாரனை வந்து கண்டார். 81

கண்டவுடன் முனி தண்டனிட்டந்த கந்தனையும் வலமாக
வந்து, காதுக்குள்ளே யோதிச்செயல் போதித்தொரு மாதுற்றிடுங்
காரணந்தான் சொல்லக் கேளுமென்றார். 82

ஐயனே யென்குருவேசாமியிந்த அண்டருலகெலாம் பார்த்து
வந்தேன், அதிமோகன ரதியோயிவள் சதிபூரண மதிதானென ஆச்
சரியஞ் சொல்லக் கேளுமென்றார். 83

தென்பொதிகாசலம் விட்டிறங்கியிந்த தேசங்கள்சுற்றி வரும்
வழியில், ஜெகமோகினி யிவளோவென்ன சுகமேவிய மகள்சீருடை
தெய்வ மடக்கையைக் கண்டு வந்தேன். 84

மின்னற்பிரகாச விளக்கொளியோயிவள் மெல்லியர்க் கெல்
லாங் குலக்கொடியோ, வேதனிப்படி மாதொருத்தியை சூதெனக்
கபடாய்விதித்தது வேடர்தினைப்புனங் காக்கவன்றோ. 85

வாயினாற்சொல்லவுங் கூடாதுகண்டால் மற்றொரு பெண்களைத்
தேடாது. மங்கைக்கிவ ளங்கப்பணி தங்கச்சிலை யுங்கற்பனை மாலை
மடலி லெழுதிவந்தேன். 96

பன்னிரு கண்ணிலுங் கந்தசுவாமிநீ பாருமென்றேமடற் கைக்
கொடுத்து, பாதபொற்கம லாசனத்திலே நீதமுற்றொரு சூதகற்
றியே பணிந்து நாரதர் தண்டனிட்டார். 87

கந்தன்சுகமடற் கைதனில்வாங்கியே கண்சிமிட்டாம னின்றே
திகைத்து, கவலைக்கடல் பெருகத்திரி புவனத்திலு மிவளுக்கிணை
கண்டதில்லை யென்று காதல்கொண்டார். 88

கண்ணேபொன்னே பெண்ணே வள்ளி வள்ளியென்று
கையில் மடலைப் பிடித்துக்கொண்டு, காமன்கணை யைந்தும்பட
சோபம்மிக வேவந்திட கந்தன் மயங்கித் தளர்ந்தாரே. 89

கிட்டவந்தென்னிடம் பேசாயோ பெண்ணே கிருபையாய்
என்முகம் பாராயோ, கமலத்திரு வதனத்திலே முகம்வைத்தொரு
சுகம்பெற்றிட கன்னியே நீதந்தா லாகாதோ. 90

பெண்கொடியேபகந் தங்கமேசேற்றே பேசினுன் வாய்மூத்
தஞ் சிந்திடுமோ, பேதகத்தோடு பாதகத்தினி தோதகத் தொழிலே
மிருந்தவள் பேசாமடந்தையோ சொல்லுமென்றார். 91

கண்ணிமை கொட்டாத தென்றவுமோ பெண்ணே காமக்
களஞ்சிய மோவறியேன், கற்பகத்திரு வெற்படுத்துனை வைப்பதற்
கொரு வெற்படுத்தவர் கன்னெஞ்சவேடர் கண்டார் மயிலே. 92

வாலசன்னுசியோ பேசவொண்ணுதோ சொல்மவுன மோகசு
மாதாசே,வாசகத்தொருநேசகத்திலே பாசையென்குர லோசையே
படவாய் விட்டடங்காத மையல் கொண்டார். 93

சித்தமிரங்கி யுருகாதோவுன்னைத் தேடியென் மோகம் பெரு
காதோ, தேகத்திலே மோகித்தெமை யோகப்பிர தாபப்படச் செய்
கைதொண்டு புரியேனே. 94

வாய்திறந்தோர்மொழி சொல்லாயோ வந்த மன்மத ராஜனை
வெல்லாயோ, மகுடக்கன பாதத்திலே சுகமுற்றனு போகத்திலே
மாறாமல் தொண்டு புரியேனே. 95

கட்டிக்கலந்து சுகந்திரவுன்னைக் கட்டிப்பிடித்தேன் சுக
மடலே, காமக்கனை மீறிச்சுக போகத்தோடு பூமிக்குள்ளே கந்தர்
மடலையும் விட்டெறிந்தார். 96

வாலசுப்ரமண்ய வேலருமிப்படி மயங்கிமெத்தையி லேசாய்ந்
தார், மானார்சுக மீனார்விழி தேனுளிது காணாமலே மாதுதெய்வானையு
மோடிவந்தாள். 97

அருகில்நின்றிடு நாரதரைக்கண்டு அன்னை தெய்வானையும்
என்னசொல்வாள், ஆதியிற்பக டாய்விதித்திட சாதியிற்செழிலோ
வுமக்கிது அருந்தவமுனி வோர்க்கழகோ. 98

அன்னை தெய்வானையே சொல்லுவேன் கேளம்மா அடியேன்
மேலொரு தோஷமில்லை, ஆறம்படை வீடும்வினை யாடுங்குகை
நீருஞ்சுனை யாடியேசுற்றி வரும்வழியில். 99

வேள்விமலையென்னும் கானகத்திலங்கே வேடர்க்குறக்குல
வள்ளிதன்னை, விரிவாகிய பரிபூரண மாதுபோலவே சதிராயொரு
மின்னைக் கண்டேனென்று சொன்னதல்லால். 100

மங்களமாய்க்குற மானைமணக்குநீர் மாலையிடுமென்று பேதக
மாய், வடிவேல்விழி மடமாதையு மடியாளுமக் கடியாளென வாயி
னுற் சொல்லவு மில்லையம்மா. 101

உண்டவீட்டுக்குநீ ரண்டகஞ் செய்தாயே ஓ கெடுவாய்ப்
பாவி நாரதனே, யுள்ளாகநீ யில்லாமலே கள்ளமொழி விள்ளாதே
நீ யுன்னிடசேதி தெரியுமென்றாள். 102

இந்திரன்கண்ணே பசுங்கிளியே சும்மா யென்மேற் சந்தேக மென்னுதே, இனிதாகிய கனியாவருந் தனதாகவே மனதாகுவ தெப்படி கண்டாய் பெண்மயிலே. 103

இத்தனையுஞ் செய்து சுத்தி கட்டவ னில்லையென்றே மொழி சொல்லவந்தாய், இதைநீயொரு கதைபோலவு மதியோதலை விதியோ சொல்லுமென் குறைக்குஞ் சந்தேகந் தீராதே. 104

குண்டுணி நாரதனென்றுனை பித்தக் குவலயந்தன்னி லெடுத் துரைப்பார், குறையாகிய செதிபேசியே பரியாசமா யெனைபேச வார் கொண்ட சின்னத்தனங் கூறுகண்டாய். 105

தொட்டிலையாட்டித் தொடையைநெருடிய தோர்தகவித்தலையை யானறிவேன், சுபசோபன மதுபேசிட முகமாயமோ விதுபாயமோ சுத்தா வள்ளியைப் போலெழுதி. 106

சித்திர மடலையென் சுவாமிக்குத் தந்துநீ யித்திர பேதங்கள் செய்யலையோ, தெரியாதன மறியாததோ பெரியோர்தவ நெறிதா னிதோ சீக்கிரம் போமென வெழுந்திருந்தாள். 107

சித்திர மெத்தையில் நித்திரை செய்கின்ற செந்தில் வேலாண்டி யைத் தான்பார்த்து, தெய்வானையின் வைபோகமும் பொய்யோ வென் உய்யும்வகை தெளிந்து விண்ணப்பம் செய்யலுற்றார். 108

கந்தரே நீயொரு கம்பத்தில் ரண்டானை கட்டவென்றோ விந்தக் கோலங்கொண்டீர், கருணாகர மதுபோலவே குறமாதையு மறவா மலே காதல் கொண்டீரென்ன பேதகமோ. 109

என்னிலும்பார்க்க வதிசயமோவந்த வேடக்குறத்திமே லிச்சை கொண்டீர், எங்கும்புகழ் மாதோயிவ னெங்குங்கிடை யாதோ சொல்லுமென்ன சொல்லயினி யாவதென்ன. 110

அந்தப்புனிப்பு மதித்து பாருமென் னாசைக்குமர குருபரனே, அயில்கோர்விழி மயிலாளையுங் கைவாகுட னொயிலாகவே யன்புடனே மணஞ் செய்யுமென்றான். 111

சந்தோஷஞ் சந்தோஷ மென்றெழுந்தார் கந்தர் தாகந்தெளிந்து மனங்குளிர்ந்தார், தனதாகிய மனையாளொரு மனதாகவே சாரு கதி தந்தே விடைகொடுத் தேகுமென்றான். 112

வள்ளியிருக்குந் தினைவனச் சோலைக்கு வழியெங்கே சொல் லும் நாரதனே, மறவாதொரு குறமாதையு முறவாகியே வரவேணும் நீ வாவென் றடங்காத மையல்கொண்டார். 113

வில்லம்புகொண்டு வேடராஜன்போல் வெற்றி மகுடமுடி புனைந்து, வேலாயுத கோலாகல சீலாவனு கூலாவர வேணுமென்றா ரந்த நாரதரும். 114

அப்படியே கந்தன் வேடுவர் கோலங்கொண் டாறுமுகமொரு முகமாய், அருகேமுனி பிரகேவர குருவாகிய தலைவேலவ ராகத் தன்கொண்டு முன்னே நடந்தார். 115

கந்தரும் நாரதரும்வழிகூடியே காடுசெடியெல்லாந் தான் கடந்து, கனிவாய்மொழி யினிதாகவே தினை தாவியே வனமேதெனக் காரணமாக நடந்தாரே. 116

பொன்மலையான மலைநடந்தார் பொங்குங் குற்றால மலைநடந் தார், பொதிகாசல மதிலேகிய நதியாகிய நதிசூழ் தவம்புரியுங் கோசிகமா முனிவன். 117

வேள்விவடக்கு மலையிதுவாமிங்கே மெத்தயுஞ்சித்த ரனேக முண்டாம், வெகுவாகிய தவமேவிய குகைபாரென விரைவாகவே விண்ணாட்டு நாரதன் சொன்னதுவே. 118

கந்தன் திகைத்து மதிமயங்கியங் கானகமெங்குந் திரிந் தலைந்து, கனபேதையின் மனதாகினேன் தனதாகிய வனவாசமே கன்னிதினைமனங் கண்டீர்களோ. 119

போதனைக்குள்ளென்னை யாளாக்கியெந்தன் புத்தியைப் பேத கஞ்செய்தாயே, பொய்யோவிது மெய்யோவுன்றன் செய்கோல மோ மையோ யிந்த புவனிடத்தேனில்லை நாரதனே. 120

சித்தமயங்கவே ஐயாவேயுன்றன் சிந்தையில் வேறெண்ணம் வையாதே, தேனார்மொழி மானுமையும் பூணுமலே விணுகுமோ சீக் கிரம்வாரும் சுவாமி யென்றார் 121

மந்திரவேள்வி மலைக்குகேயந்த வள்ளி தினைவனந் தோற்றுது பார், மலையாதே நீ மெலியாதுவதி தலைவேனினி நிலையாரிது மான் மருகா கதிர்வேல் முருகா. 122

சோலை யிளங்குயில் மாமயிலாள் வள்ளிபோல மென்குரல் பேசுகிறாள், தொனியோயிவள் மணியோதிகழ் பனைசேர்மொழி தினை காவலில் சுந்தார காதாரக் கேளுமென்றார். 123

காதாரக்கேட்டு முன்னே நடந்தார்முனி காலக்கறிகொண்டு பின்றொடர்ந்தார், கருமாமுகில் நிறமேகுழல் தொனியேகுயில் நடை யோகினி கந்தர் தரிசனங் கண்டாரே. 124

கண்ணுக்குள்ளே நின்ற கண்மணியோவந்த காமன் ரதியோ கதிர்மதியோ, கனசோபித மெனவேயிவள் தினமேவிய வனமே வருங் காரண மேதசொல் வாய்முனியே. 125

தோகை பெணுஞ்சக பேதையரோ யுன்மேற் காதல்கொண்டே னடி மாதரசே, கொஞ்சுங்குயில் மிஞ்சுந்தொனி கொஞ்சந்தனில் வஞ் சந்தா கூவுதல் வேளினஞ் சோலையிலே. 126

மாரன்விடுங்கணை பட்டுருகி யெந்தன் மாலைப்பிளக்குதடி மயிலே, வாவென்றெனை மேவுந்தொழில் காவுங்கன தாவுண்டிட மன்மதன் போற்கூட மாட்டேனே. 127

வந்தவிருந்துக் குபசரித்தன்னம் வழங்காதபேருண்டோ வையகத்தில், மானேகனி தேனே அடி தானேமய வானேன்மழு வஞ்சக நெஞ்சம் படைத்தாயோ. 128

சொன்னதெல்லாங் காதிற் கேட்கிலையோ பெண்ணே என்னையுங் கண்ணாலே பார்க்கிலையோ, சோபந்தன மேவுங்கனை தாபம் பெற நீவந்தெனை சொந்தமாய் கைவசம் செய்யாயோ. 129

பேசினதாற்குலம் தாழ்வாமோயினம் பேதையரே யுந்தன் வாய்நோமோ, பெண்ணேஅடி கண்ணேமனம் புண்ணாகுது சொன்னேனுந்தன் பேரென்ன சற்றுநீ கூறுமென்றார். 130

கந்தனுரைத்த மொழிகேட்டு வள்ளி காதிலிருகையை வைத்து நின்று, கருணாகர வருணாசல வருவாய்தனை குருநாதனே காதிலுங் கேழ்க்க விதியாமோ. 131

ஆகட்டுமென்று மனந்துணிந்து வள்ளி மோகித்த கந்தரைத் தான்பார்த்து, அடமோமன திடமோஅவ கடமோயென திடமீதிவர் ஆர்சொன்னாரிம்மதி வேடுவனே. 132

வாய்திறந்தோர்மொழி சொன்ன தென்னிட மாதவம்தானடி கண்மணியே, மாரன்கணை மீறுந்தன பாரந்தனி லேவந்துனை மருவியேமோகந் தெளியேனோ. 133

மெத்தப்படித்தவன் போலேவந்தாய்நீ பித்தம் பிடித்ததோ வேடுவனே, வேலுந்தனை கீழுந்தறங் கோலஞ்சுந காலக்கவை வீணாகநீகெட் டலையாதே. 134

ஏதடிபஞ்சமா பாதகியேநீயும் என்னிடம்வாது செய்யாதே, இன்பமாய்வெகு கண்பாகவே என்பங்கிலே அன்பாகவே என்றைக் கிரங்குவாய் பெண்மயிலே. 135

எட்டாததேனுக் கொருநொண்டி பண்ணுத்து கொட்டாவி விட்டக் கதைபோல, எங்கிக்கணை தாங்கிப்பனை வாங்கிமிக ஓங்கியெதிர் என்முன்னே நில்லாதே வேடுவனே. 136

இப்படிநீமுழு வஞ்சகமாயெனை கற்பனை செய்வானேன் மாதரசே, ஏழைக்கொரு வாழைக்கனி வேளைக்குத வாதிப்படி இன்னமுமர்மம் விடாயோ நீ. 137

அன்னைமாரம்பு கொண்டுவருவாருன்னை அடித்துக் குலையைப் பிடிக்கிடுவார், அக்கந்தனை பங்கம்பட வெங்குப்பிர சண்டர் அற்று விழுதகுண்டு செய்திடுவார். 138

அற்றிரு தண்டாய்நான் பட்டாலும்வேட ரற்றுகிழக்கண்ணை தொட்டாலும், ஆசைக்கொரு நாளைத்தினம் பேசுச்சுக தாபத் துடன் அன்பாயொரு முத்தம் தந்திடுவேன். 139

சுற்றிச்சுற்றிவட்டம் போட்டுவனமெங்கும் சுற்றியின் றேங் கித் தியங்காதே, சொல்லைக்கேள் இல்லைப்படு கள்ளத்தோழி துள் ளத்திலே தோழியரைவிட் டடிக்கச்செய்வேன். 140

மங்கையற்கையி லடிபட்டால் தெய்வ கன்னையாடும் பலனைப் பெற்றேன், மயிலேகுற மயிலேகருங் குயிலேகிழி தயிலேனடி வந் தொரு வார்த்தைநீ பேசாயோ. 141

எதுபரியாச மிஞ்சுகிறுய்பெண்கள் சேதியறியாமற் கொஞ்ச கிறுய், இனிமேலுன்ன முனிவேன் பயம் செனியாமலே துணிவாகநீ என்ன கோலஞ்செய்ய வந்தாயோ. 142

கோலமெல்லாமாசை கோவமல்ல வ்வேறே கோலமுண்டோ சொல் பெண்மயிலே, கூவுங்குயில் மாயிங்கண நாகஞ்சுக மேவுந் தொழில் கூடும்பருவ மிதுவுனக்கே. 143

கொம்பிளவிற்பட்ட மந்தியைப் போல்நின்று வெம்பித்திரிந்து மெலியாதே, பண்டாய்பணம் கொண்டாய்மையல் தண்டாகு வாய் செ ன்னேனினி காணுமலோடுவாய் வேடுவனே. 144

பஞ்சையைப்போல்நின்று கொஞ்சுவண்டி பெண்ணே வஞ்சி யின் வேல்விழிக் கஞ்சுவேனே, பழியாகிய மொழிபேசுவா யடி யேன்மனத் தொழியாதடி பாவியுன்சித்த மிரங்காதோ. 145

ஊர்குடிதன்னைக் கெடுக்கவென் றுயிவ ளுண்டிவேஷங்கொண்டு வந்தாண்டி, அவனுறிது புவிமீதிலே சிவனுர்செய லதுபாரடி அன் னமே யென்னுயிர்ப் பாக்கியமே. 146

பாக்கியருமிந்த வேடனைப்பார்த்து பதைத்துநின்றே மொழி சொல்லலுற்ருர், பழிகாரனே தெளிவாகநீ மொழியாதேபோய் வழிகூறிவாய் பாக்குகுலைந்திட ளாளாச்சோ. 147

இக்கிற மென்மொழிப் பாக்கியரோங்க னெனக்கும் வள்ளிக் கும் பொதுவாமே, என்றுந்தன தென்றுந்தனை யென்றும்மற வாதேயினி யென்றைக்குங்கீர்த்தி யுண்டாகுமென்ருர். 148

வஞ்சனையுள்ளவன் போலேவந்து பெண்ணை வாதிட்டுயேய்க்க வென் றிங்குவந்தாய், மதமோவென விதமோவிது சதமோதுார விதமோவிது சற்றுக்கவனியும் வேடுவனே. 149

நம்பினபேரை நடுங்கச் செய்வது ஞாயமல்லபெண்ணே பூவையே, நாடுஞ்செயல் கூடுஞ்சிறு பேடுஞ்சரி சேர்ந்தா னன்றுக [illegible]னைஞ் [illegible]னென்ருர். 150

கந்தனும் வள்ளியும் பந்தமாய்நின்று கைசரசஞ் செய்யும் வேளையிலே, கதருங்குட லுதருங்குலை யுதருங்விழி சிதறும்படி கானக வேடுவர் வந்தாரே. 151

கானகந்தன்னிலே வேடுவருமெய்ஞ் ஞானக்குமர குருபரனும், கண்டஞ்சியே நின்றுஞ்செய வென்றும்புகழ் குன்றந்தனில் காரணமாய் கையாற் காட்டிலொன்று. 152

பூவுந்தழையும் பிஞ்சுங்காயுமாய் புதுமையாக வளர்ந்தோங்கி, பொங்குப்வன மெங்கும்மிரு டங்குப்நிழ லெங்குந்தா பூரித்து வேங்கை மரமானார். 153

நின்றவேடுவர் முளைத்திடும் வேங்கை மரத்தைக்கண்டு மதி மயங்கி, மலைவேடர்கள் சிலர்கூடியே பலயோசனை செய்தேயிது வஞ்சனையென்று நினைந்து சொல்வார். 154

என்றுமில்லாவிந்த வேங்கை மரமிங்கே யின்றைக்குவந்து முளைப்பதென்ன, ஏதோவிது சூதோவென தீதோதெரி யாதேயென்று ஏந்திழை வள்ளியைக் கேட்கலுற்றார். 155

தங்கையெனும் வள்ளி நாயகியே அம்மா எங்கள் குலக்கொழுந் தேகேளாய், சதிராகவுன் னெதிரேயொரு விதிகாரண மிதுவே தென தயவாகவள்ளி சாற்றலுற்றாள். 156

விள்ளுகிறேனினி யண்ணமாரேயந்த வேங்கை முளைத்ததை யானறியேன், வினையாகவே தினைதானியே உனமீதிலே கனிபோல வே விம்புக்குவந்து முளைத்ததென்றாள். 157

பைங்கொடிவள்ளி யுரைத்ததைக் கண்டிந்த கந்தன்செய லென்று வேடுவரும், கானக்குர லோசைப்படி நேசத்துடன் பேசித் தினம் பாலைவனத்தி லதிசயமே. 158

தங்கைக்குவேங்கை மரந்துணையாய்நல்ல தாபல்யமாய் வெகு சோபிதமாய், தங்குப்புனல் பொங்குப்வன மெங்குப்நிழல் தங்கும் படி சண்முகநாதனே துணையிருப்பான். 159

எதுக்குமஞ்சாதே மாதரசேநாங்கள் சோதிக்கதிர் கொய்தே வருவோம், என்றந்திசை கண்டுங்கன குன்றும்பதி சென்றஞ்சில வேடக்குறவர்கள் போனபின்பு. 160

வேங்கையாய்நின்ற வுருமாறிக்கந்தன் வேடனுருவ வடிவாகி, விரகத்தனம் பெருகிச்சுக சரசத்தொடு மருவிக்குற மெல்லியர்தம் மிடமேதுசொல்வார். 161

உன்னைமறக்கப் படவில்லையேயெந்தன் கண்ணுக்குறக்கம் வர வில்லையே, உனதாசையின் மனதாகவே நினைவாகுது தனதாகநீ புற்றுணையாக நம்பிவந்தேன். 162

ஆசைகொண்டபேர்க்கு ரோஷமில்லையென்று பேசவந்தாயிந்த வேடுவனே, அடவாகிய மடயார்களி னிடமேவரு கடனேதினி யாசாரங்கெட்டவன் நீயல்லவோ. 163

ஆசாரமுங்கள் வாசாரமேபெண்க ளாசாரமெல்லா மானறி வேன், அடிபாதகி கொடிநாரீ றடியாமனம் படையாதேநீ அன்னமேதேனே பெண்மயிலே. 164

வம்புக்குச்சண்டை வளர்ப்பதில்லையெந்தன் கும்புக்குறக்குலம் வேடுவனே, வந்துபல சூதுங்கள் நீதுப்பலி யாதெங்களை மாராட்டஞ் செய்ய முடியாதே. 165

வம்பிலேமாயாவி நாரதன்வார்த்தையை நம்பிவந்தேன்மதி கெட்டலைந்தேன், மதனன்கணை யதுவந்தென்னை நிறமுந்தவ சிவசிந்தனை மதியும்பேதக மாதனவே. 166

கன்மணிப்பாவையை எட்டியெட்டிச்சும்மா கையிற்பிடித்தா லகப்படுமோ, காடுந்திட பேடுஞ்சிறு ஓடுங்குயில் பாடுந்தொனி காமரசத்தை விளைத்ததென்றார். 167

அந்தட்சணத்திற் குறவருமன்புடன் வந்ததைக்கண்டு கபடமதாய், அருள்வேலவ னொருமாதவ னுருவாகியே குறவோர்கள் முன் அங்கம்வெடுவெடுத் தாடிநின்றார். 168

தொண்ணூறுஞ்சென்ற கிழவனைப்போலுடல் தொங்கியே கண்களும் பஞ்சடைந்து, சுமல்வாய்மொழி குளிர்வாகிய தளர் வாய்முதிர் பழமாகவும் தோன்றியேகாவியும் பூண்டுநின்றார். 169

கொட்டியபஞ்சுபோல் நரைமயிறும்பல்லுங் குட்டியேவாய் நீர் வழிந்தொழுக, யோலஞ்சுக காலம்பணி தானம்வெகு காலந் தனை கொண்டுநடந்த பெரியவர்போல். 170

செம்புலித்தோலும் விபூதிபஞ்சாட்சரந் தண்டிகமண்டலங் கைபிடித்து, சிவனேயருள் பவனேயினி யவனேதனை கதிநீயென தெளிந்தயோகியைப் போலே நின்றார். 171

கானகந்தன்னிற் றபோதனர்வந்ததும் காரணந்தானென்று பூரணமாய், சனவேடர்க ளனைவோர்களுந் தனதாயொரு மனதாகவே கழலிணைபோற்றி பணிந்துசொல்வார். 172

ஐயாவேபண்டார சுவாமிநீயெங்களை யாண்டகுலதெய்வம் போலவுநீ, அடிமேலடி தடுமாறியே கொடிதாகிய சுடுகானிலே அங்கம்பொருந்தவே எங்குவந்தீர். 173

வேங்கையுங்காட்டு மிருகங்களுக்கெல்லாம் பாங்குடன் தப்பிப் பிழைத்துவந்தீர், விதிகாரண மதுபார்வளர் பதிதானிது எதுவோ சொல வேணுமென்றாரந்த வேடரெல்லாம். 174

சொல்லுவேன்கேளுங்க ளையமாரேவெகு தூரம்வடலை வாசம்
விட்டு, தங்கமாமதி கங்காசல மங்காமலு கந்தாடியே தொல்லுல
கெங்கணும் சுற்றிவந்தேன். 175

தெண்டிரைசூழும் சதியருணைசலம் சீர்காழியென்னும் சிதம்ப
ரத்தில், சித்தம்பெற வைத்தும்பல முற்றம்பரி சுத்தந்தா தேடி
யொருபலன் கிட்டாமல். 176

கண்டிகதிர்காமங் கோசலதேசங் காசியிலுமது வாசியென
கண்டும்பல னுண்டுஞ்செயல் கொண்டுபுக ழொன்றுந்தருங் கன்
னியாகுமரி யாடவந்தேன். 177

சத்தமுஞ்சத்தமும் வேறுபட்டுத்தலை சுற்றியேபுத்தியின் கூறு
கெட்டு, தன்னுங்குலை தன்னுந்துய ரன்னுந்துணை கொள்ளும் வெகு
தர்வந்தமாகிய வேலையப்பா. 178

உங்களைத்தஞ்சமென் றேநம்பிவந்தேனு னங்கைக்குறக்குல
வேடுவரே, உலையாமென கலையாலொரு நிலையாகிட மலையோ
வெனக் குண்மை சொல்லீரெங்க ளையமாரே. 179

அப்படியேயுங்கள் சொற்படிகேழ்க்கிறோ மன்புள்ளதங்கை
பொருத்தியுண்டு, ஆடுங்கயல் கூடும்விழி நீடுந்திலை நாடும்புன
மதோயிருக்குது வாருமென்றார். 180

மெள்ளமெள்ளக்கை பிடித்துப்பண்டாரத்தை வேடிக்கையாக
நடத்திக்கொண்டு, வேலன்செய லாலேயனு கூலம்பெற வாவென்
றவர் மெல்லியற்கேதுணை யாகவைத்தார். 181

தங்கமேபெண்குயி லேமயிலேவள்ளித் தாயேநம்குல சாமி
யைப்போல், தாபந்தம தாய்வந்தவர் சேபங்கன பாவமிது தஞ்ச
மென்றோர்களைத் தள்ளுவரோ. 182

ஆனாலுமிந்தப் பரதேசியேமெத்த அதிதியைப்போலவுங் காணு
தம்மா, அன்பாயிவ ரின்பால்மிக வன்பேசெய வுன்பால்கிருபை
யாகவந்தனம் தெண்டனிட்டார். 183

நல்லதினைக்கொய்து போம்பொழுதங்களை நாங்களுங்கூட்டி
யே செல்வோமென்று, நன்றாய்மன மொன்றாகவே சென்றார்மதி
கண்டார்குற நம்பியும்வேட ரனைவோரும். 184

தந்தையண்ணன்சொல்லத் தப்பாமல்வள்ளி சிந்தைதெளிந்து
மனங்குளிர்ந்து, நாசத்தொடு மோகித்தொரு யோகப்பர தேசிக்
கிவன் சரணமென்றிரு கைகுவித்தாள். 185

ஆண்டவரேபண் டாரமேபோற்றியென் னையனேயெங்கிருந்
தோங்குவந்தீர், ஆடம்பர வேடம்புனை நீடும்பர வாடுஞ்செய லங்கந்
தளர்ந்திடும் காலதிலே. 186

மாதவரே சிவ சங்கமரே ஐயா வேதமெய்ஞ்ஞான தபோதனரே வாரும்பா ணேறுங்கனி தீருக்கதைக் காருந்தினை மாப்பலகாரங் கொடுத்திடுவேன். 187

காத்தபொருளைக் கனைபோகக்காத்து பேத்தியானேனைப் பண்டாரமல்லோ, கண்டுந்தனை கொண்டிஞ்சுக மென்றும்பலனுண் டாம்படி காப்பாற்றவேணுங் கடனுனக்கே. 188

நல்லதுபண்டாரஞ் சுவாமிசற்றேபொறு உன்னமும் போலே பசிக்கமுது, நாவும்மூணர் வாகத்தினை மாவும்மிகத் தேனும்பழம் நான்கொண்டு வாறேனென் றேயெழுந்து. 189

செந்தினைமாவை பிடித்துப்புடைத்துத் தெள்ளியதேனை விட்டுப் பிசைந்து, தேறுங்கனி மீறுஞ்சுவை யாருங்கனி கூறும்படி சித்திர மாய்ப்பல காரஞ்செய்து. 190

தேக்கிலைகொண்டதை தொன்னைதைத்து அதில் தேனுந்தினை மாவும் முன்னேவைத்து, சிறியாளுமை யறியாதவள் தருபோசனம் பரிபூரண தேவாவுண்டுபசி யாறுமென்றாள். 191

மாப்பலகாரமிந் தாருமையா சுவாமி சாப்பிடுஞ்சுவாமி யென் றேகொடுத்தாள், வாசம்பல காரத்துதவு மாசைப்பட நேசித்தவர் வஞ்சகமாய்த்தினை மாவையுண்டார். 192

உண்டந்தமாவைநன் றுகவிழுங்கவே வுருண்டுசுருண்டு கண் ணீர் ததும்பி, யோடிக்கனை ஆடிபுடல் வாடிக்குட லாடிப்பாந் துள்ளுடைத் தப்பத்தள் ளாடையிலே. 193

கண்டந்தவள்ளி திடீரென் றெழுந்துதன் கால்பதறிக் கிட்ட வோடிவந்து, கைகளுடன் மயில்வேலனை குயிலால்குற ஒயிலாள் தானுங் காதினிற்சுக்கைகவைத் தூதிநின்றாள். 194

பெண்ணேயென்றாரோடி முன்னேவாந்தாண்டி பேத்தியென் றார் வள்ளிபோற்றியென்றார், பேதத்தினை மாவைக்கன மாதேதரநீ வைத்து பேதகமென்றுந் தெரிகிலனே. 195

மாவென்றுசொல்லியே நஞ்சைதந்தாய்பாவி தாவென்றுசொல் லியே வாங்கியுண்டேன், சதியோவிது விதியோவென் கதியோதனை விதியோவினி வாதென்னவென்னுயிர் போகுதென்றார். 196

தொண்டையைச்சுற்றிப் பிடிக்குதடியுயிர் கண்டத்தில் நின்று துடிக்குதடி, சூதங்கன நீதஞ்செய லேதுந்தெரி யாதெந்தனை சேதகஞ்செய்யத் துணிந்தாயே. 197

எட்டிக்கனியோசெங் கொட்டையோவா பாஷாணக் கட்டி யெனக்கன்றோ தேடிவைத்தாய், எளைப்பா தேசிக்கிது வேளைப்பல னேயிற்றது இப்படியுஞ்சதி செய்வாயோ. 198

கன்னியாகுமரி யாடவந்தபலன் கைமேற்பலித்ததே சண்டாளி, காதுக்குள்ளே செவ்க்கணை சூதற்றளம்பேதிக்குத கன்னியே தண்ணீர் வேணுமென்ருர். 199

தண்ணீரொன்றுள்ளஞ் தயங்கிய பண்டார சாமியிதவென்ன கோலமையா, தங்காள்விதி பலனேகதி குவயாதக மலவோயித சம்புசதாசிவன் சோதனையோ. 200

கொம்புதேன்விட்டுப் பிசைந்தபலகாரங் கொண்டுவந்தண்ணக் கொடுத்தபலன், கோலஞ்சுக காலங்கலி காலமித வேலன் செயல் கூற்றுவன்போல்வந்தீ ராண்டவனே. 201

நன்மையேநான்செய்ய தன்மையென்றீரையோ நல்லதுக்கோ யித காலமல்ல, நானும்பல காரங்கனி தேனுந்தினை மாவுந்தா கஞ் சென்றுசொன்னீரே வஞ்சகமாய். 202

தந்தையண்ணமார்க ளெந்தனுக்குன்னைச் சகுனியைப் போலவே கொண்டுவந்தார், தாவுங்கலை யாவுங்குயிற் கூவும்பன மேவுஞ் சுனை தண்ணீர்சாப்பிடும் சாமியென்ருள். 203

இந்தச்சுனைநீ ரருந்தவென்றுலிப்போ சந்தேகந்தோற்றுத வேண்டாம்போ, என்பால்மன தன்பாவிரு கண்பாரடி வெண்பாவையே என்பழியையிங்கே காணுமென்ருர். 204

வம்புகள்கொண்டபண்டாரமேயின்னம் வாயில்வந்ததெல்லாம் பேசுகிறீர், மாயன்விதி சூதென்பது எதுந்தெரி யாதிங்கினி வாருமிந்தச்சுனை பாருமென்ளுள். 205

கள்ளமில்லையித நல்லதண்ணீரையா மெள்ளயிறங்கிப் புசியுமென்று, கனமாகிய வனமீதிலே தனதாகிய சுனையீதென கன்னியுமெள்ள யிறக்கிவிட்டாள். 206

தாகமுடன்சுனை நீரையள்ளிமிகப் பாகமுடனுண்ணும் வேளையிலே, தடுமாறுதென் னடிசோருத விடுமோபழி யடிபாதகி சற்றே பொருகையை நீட்டுமென்ருர். 207

ஆகாரமாய்த்தண்ணீர் கேட்டதற்கோயென்னைப் பாதாளந்தனிலே தள்ளிவிட்டாய், அானுர்செயல் தருவாரடி குறமாதுனை மறவேனினி யாபத்துக்குப்பாவ மில்லையென்ருர். 208

கையைப்பிடித்தென்னைத் தூக்கடிபாவிநான் பையப்பையக் கரை சேருகிறேன், கடிதேதுயர் கொடிதேவெயில் சுடுதேவுயிர் விடுவேனினி காலமெங்கேயித கோலமென்ருர். 209

ஆறுமற்றபா தேசியேயுன்கையைத் தாருமென்றேவள்ளி கைப்பிடித்து, ஐயாவொரு கையாயித வையாயித மெய்யாயித ஆண்டவரோவாருமென் றிழுத்தாள். 210

சந்தோஷம்வள்ளிகை தந்ததேலட்சம்பொன் தானென்று பண்டார மானந்தமாய், காகக்கன போகத்தோடு மோக்கனே யேயுற்றவர் சம்பிரமாகக்கரை யேறிவந்தார். 211

கோனக்குற மானேயிருவருங் கூடினதாலொரு குற்றமுண்டோ; கோலத்திரு மேனிக்குற மானேதிரு வேகற்றவன் கூசாமலெந்தனைச் சேராயோ. 212

பண்டாரமேயுன்னைக் காத்தபலனெனக்குப் பலித்ததயிப் போது கைமேலே, பாபந்தனு சோபம்வெகு தாபந்தம வாய்வந்தெனைப் பாசாங்குசெய்தாயே பாதகனே. 213

புண்ணியமென்று நலைக்கிழவாநல்ல தண்ணீர்கொடுத்தம் வீணுச்சே, பொல்லா தவன்கில்லர்தேகீ சொல்லாமொழி விள்ளாதே நீ புத்திகெட்டவாண்டி தூரநில்லும். 214

பிச்சைக்குவந்தவன் பெண்டுக்குமாப்பிள்ளைபிச்சைகொண்டாலது நிச்சயமே, பேதைத்தன மாயித்தனை சூதற்றிடு தோதக்கிழம் பேசட்டுமென்று நடந்தாளே. 215

அந்தமொழியை யறிந்துசிவகிரி கந்தனுஞ்சிந்தை மதிமயங்கி, அருமைக்குற மகளைத்தன முறிமைப்பட மனமுற்றவர் யானைமுகவனைத் தியானஞ்செய்தார். 216

மந்திரத்தியானமாய் கந்தனுரைத்ததை தந்திமுகவ னறிந்துகொண்டு, மலைமுடியே சிலையோடவும் பிலமாகிய குலையானையாய் வள்ளியின் முன்வந்து தோன்றினரே. 217

வெண்ணிறங்கொண்ட வடிவாகித்தந்தி யீர்கொண்டுவள்ளிக்கெதிர்வரவே, வெருண்டஞ்சியே நின்றங்ஙனே மருண்டுஞ்செடியொன்றுந்துணை காணுமலேவள்ளி யோடிவந்தாள். 218

ஐயாவேபண்டார சுவாமிநகல்காரம் யானைமட்டுதே கானகத்தில், அன்பாகவே நம்புமுனை யென்பால்வருந் துன்பந்தனை ஐயாவடைக்கலங் காருமென்றாள். 219

என்னடிபாதகி நீயென்னைக்கொல்லவேமுன்னமேமாவென்று நஞ்சைத்தந்தாய், எந்தன் விதி முந்துங்கதி யுந்துஞ்சதி கந்தன்செயல் என்னபோதப்பிப் பிழைத்துவந்தேன். 220

தாகத்துக்குத்தண்ணீர் வேணுமென்றேனுயிர் போகக்கிணற்றிலே தள்ளிவிட்டாய், தந்தித்தலை சுற்றிச்செயல் முற்றிப்படி தொற்றப்பிர தாபத்தொடுநான் வெளியில்வந்தேன். 221

மூன்றுவதானையைக் கொண்டுவந்தாயையம் பூண்டாவியங்கதடிக்குதடி, மோசப்படி நேசம்விசு வாசம்வெகு தோஷமுனை முக்காலும்நம்பப் படாதகண்டாய். 222

என்னைவிலக்கி விடுஞ்சுவாமிதாங்கள் சொன்னபடி யெல்லாம் நான்கேட்பேன், "இச்சைப்பட விச்சித்திர மெச்சிக்கன பட்சத் தோடு என்றைக்குஞ் சொந்தப்பெண் ணுவேனென்ருள். 223

பெண்களைநம்பியே பங்கமழிந்தவர் நங்குகளையுண்டோ மங் கையரே, பேருங்குண மாறுமிகழ் வாடும்பவ னுறும்வரும் பேச் சுறநிக்கோர் சாட்சியுண்டோ. 224

சொந்தமனையாட்டிஎன்றுநீகைதந்து இவன்பேரிலாணையிட்டே கொடுத்தால், சோலைத்தட வானைப்பயம் நானிப்படி மானத்தோடு னுரத்தன்னியுனைக் காப்பேனென்றூர். 225

சொற்படியாணையிட்டுக்கொடுத்தாள்வள்ளிக் கைப்பிடி நாய கன் நீயேயென்ருள், துடரும்பழி யடருப்வினை யடரும்கரி நடரும் பழி சொல்லுமியானையும் போனதுமோ. 226

சேவலும்பன்னிரு தோளுமாகவே சென்னியோாறு முகந் துலங்க, செம்பொற்றன பைம்பொர்குற மங்கைக்கதிர் சம்ப்ரத் தொடு சிங்காரவேலன் சேவைதந்தார். 227

கண்ணுரக்கண்டவன் தானென்னவிது காரணமோபரி பூரண மாய், கந்தன்மலர் விந்தந்தனில் வந்தும்பணி தந்துத்திரு காட்சி பெற்றுன்னங் கனிந்துசொல்வாள். 228

சாமியான்செய்தபிழைபொறுத்தென்னையுந் தற்காக்கவேணுஞ் சுவாமியென்று, தஞ்சம்புகழ் நெஞ்சுங்கன ரஞ்சும்பிர பஞ்சந்தனில் தள்ளாமலென்னையாட் கொள்ளுமென்ருள். 229

அற்புதமாகிய கண்மணியேயினிச் செபுவேன் நான்வந்த காரணத்தை, அலையிற்றினி கிலையிற்றுயில் கிலையிற்பல மலைசுற்றிடு மாலுமென்மாமன் மகளல்லவோ. 230

முன்னொரு சாபத்தால் விபுதைமானுன்னைப் பெண்ணென்று பெற்று வளர்த்தாளே, முறைதங்கிய குறமங்கையர் கிறையும்மதி வரவுந்தலை முனிவனுலொரு மான்வயிற்றில். 231

பின்பு ஜனனங்கொண் டாய்மயிலே இதின் முன்பு சரவணப் பொய்கையிலே, பேசுங்கிளி நேசம்பிர வாசம்பர காசந்தா பெண் ணே திருவவ தாரஞ்செய்தேன். 232

வந்துனைச்சேரவென் றேயயன்கற்பனை தந்திடுங்காரண மிது வலவோ, மாதேயடி கோதேமலை யாதேபுவி மீதேயினி மன்மதனும் ரதி போலவுமே. 233

என்றைக்குஞ்சோடு பிரியாமற்சுகங்கொண்டுவாவி முறைப் படியே, இருபேரொரு மனதாகவே பிழையாகிலும் பிரியாமலே ஏகபோகமாய் வழ்ந்திருப்போம். 234

மூத்தக்குடியொரு மெண்டுண்டவளிலும் சொர்த்தியா யுன்னைக்
கண் பார்த்திடுவேன், மோகம்வெகு வாகக்கண பாகஞ்சுகபோகத்
தொடு மொய்குழல்வள்ளியைக் கைகலந்தார். 235

வாலசரவண வேலனும்வள்ளியும் கோலமனேக விதம்வித
மாய், மானுஞ்செயல் தானும்புனல் கானந்தனில் ஆனந்தமாய் சந்
தோஷமாகவே தானிருந்தார். 236

வட்டிப்பாதன் போலவுங்கூடியே விட்டுப்பிரியா தினங்கன
மாய், வரிதாய்வெகு பரியாசமே செரிதாகிய வரியோன்மக
ளொன்றைவிட் டொன்றை பிரியாமல். 237

நஞ்சுண்ட கெண்டையைப் போல்மயங்கியங்கே கொஞ்சுங்
கிளிமொழி வஞ்சியுந்தான், நாடுஞ்செயல் கூடுங்குயில் பேடுஞ்சரி
கோடுந்தா னானுன்னைவிட்டுப் பிரியேனென்றாள். 238

தீரா தலைமயல்கொண் டேயிருபேர்களும் மாருதமோகக் கடல்
குளித்து, சித்தம்பரி சுத்தம்பெற வைத்துங்கனி முத்தந்தர தென்ற
லுலாவிய கானகத்தில். 239

சோபந்தெளிந்து கந்தனும்வள்ளியுந் தாபந்தனிந்துவெளியேறி,
அறவாகிற குறமானையும் விரைவாகநீ பரண்மீதிலே தோழியர் தம்
முடன் சேருமென்றார். 240

வந்ததடத்தின் வழியேகுறக்குலப் பைந்தொடிசென்றனள்
கானகத்தில், கனவேகமா யெனவேகிய கனிதாகிய தினைசூழ்புனல்
வந்துகண்டாள்வள்ளி பாங்கியரும். 241

கூந்தலுலர்ந்து குலைந்ததென்னமுகஞ் சோர்ந்திருகண்கள்
சிவந்ததென்ன, கோலம்பயில் சாலம்மனு கூலந்தரு மாலிங்கித
கோதையிதுவென்ன வென்றுகேட்டார். 242

தண்ணீர்சுனையில் கடந்திடுங்காரணம் பெண்ணே வள்ளித்
தாயே சொல்லுமென்று, தயவாயுரை மயமோகுற மயிலேயிது
மயிலேகதை சந்தேகமென்றார்கள் பாங்கியர்கள். 243

சொல்லுவேன்கேளடி அன்னமேகண்மணி தோகையேயென்னு
யிர்ப் பாங்கியரே, சுனையுந்தக புனையுங்கிழ வனையும்பல வினையும்படி
சோபத்தைமாற்றித் தண்ணீர்கொடுத்தேன். 244

தண்ணீர் கொடுக்கின்ற வேளையிலே வெகு உன்னிதமாயந்தக்
கானகத்தில், சந்தத்தொனி திக்குஞ்சிலை சித்தம்மய முற்றங்கனே
தந்தியும்வாய்விட் டலறிடவே. 245

சிந்தைகலங்கி பயந்தேனடியம்மா பைந்தொடியேநான் வரும்
வழியில், செடியும்வெகு பொடியும்பல கொடியும்மொழி வழியும்
படி தேகமெல்லாமுட் கிழித்ததென்றாள். 246

அப்படியேவள்ளி யம்மையுஞ்சொன்னசொல் வெப்பிதமில் லாதல் தோழியர்கள், அதிமோகன ரதியேயொரு விதமாய்முக மதிசோருத ஏதுசொல்வாயென்றார் பாங்கியர்கள். 247

பாங்கிகளிப்படி கேட்டிடவேவள்ளி யேங்கிநின்றுளிந்தவேளை யிலே, பருவத்துட னேவேடுவர் ரூபத்துட னேவந்துமே பாணுக் கெதிர்மின் றேதுசொல்வார். 248

நாளெய்தமானிந்தக் கானகத்தினிலே தான்வந்துதேயதைக் காணீர்களோ, ஒளியுற்றிடுஞ் சபைபெற்றதோர் மொழிசுற்றிடும் வழிபெற்றிடும் நாகரீகமுள்ள தோகையரே. 249

என்றுமேவேடுவ ராசனுங்கேட்கவே நன்றுநன்றென்றுதான் பாங்கியர்கள், எங்கள்சிறு பெண்ணென்றுநீ சிங்கிதத்துட னிங்கு வந்துதானென்னமொழிசொன்னீர் வேடுவனே. 250

மாந்தளிராமல்மான் வய்வதுண்டோஅம்மா யென்தான்பொய் கள் சொல்லுகிறாய், நீ பெய்திடும் மானுக்கிரு கால்ரண்டுகை மேனித் தொடு காதோலையும்வர்னச் சேலையுண்டோ. 251

சொல்லென்று வேடுவ ராசனைக்கேட்கவே நல்லதென்று அம் மா தானிருந்தார், சரசத்தொழி லேமிஞ்சியே சரக்குயிலேயுள் ளதைச் சொல்லென்று வள்ளியைக் கேட்டாரே. 252

ஏதடி பாங்கிகள் நான்சொல்லும் வார்த்தையைக் குறென்று சொன்னீர்ங்கிதமாய், எனை நீங்களுந் தனதாகவே மனஞ்சோதிப்ப தெதுகாரண மேதுமறியே னெனவுரைத்தாள். 253

உள்ளதைச்சொல்லென்று லெங்களுடன்மொழி கள்ளமாய்ச் சொல்வது ஞாயமல்ல, ஒளியாமலே தெளிவாகநீ மொழிவாய்முகஞ் சுளியாமலே உண்மையைச் சொல்லென்றார் தன்மையுடன். 254

தன்மையாய்ப்பாங்கி களுண்மையைச்சொல்லென நன்மை யுடன்வள்ளி நாயகியும், தனதாகிய சகிமார்களே வினவென்றொரு மனதாகவே தன்கதையைவிள்ள மனந்துணிந்தாள். 255

விள்ளுவேன்கேளென் னுயிர்த்துணையாகிய மெல்லியெனும்சகி மாதர்களே, விதிகாரண மதிஞலயோ வதிமோகமா யோருவேடு வன் வேஷங்கொண்டென்முன்னே வந்ததுவும், 256

வந்தவனென்னுடன் சொந்தமாய் வார்த்தைகள் விந்தையுடன் பேசி நின்றிடவும், வனமேவித வெனதண்ணர்கள் சினவாய்வர நினைமேவிய வனத்தில்வேங்கைமர மானதுவும். 257

வேங்கைமரத்தையுங் கண்டண்ணரெல்லோரும் வேலன்செய லென்று போனபின்பு வேறுருபமாய் நாடிவந்தெனைக் கூடிடா யென மோடிபேசியே வேடுவாரசனுங் கிற்கையிலே. 258

அப்போது அண்ணர் வருவதறிந்ததான் தப்பாதநுறவயது சென்ற, அரிதாகிய பெரியோரென பொறிலையம்புல விடர்நீங்கிய ஆதிசிவனைப்போல் நின்றதவும். 259

நின்றவரைக்கண்டு அண்ணமார்கூட்டியே நன்முகநம்பிடஞ் சேர்த்ததவும், இனிவாகியே நினைமாவையுந் தனதாகவே மனதாகிய நேர்மையாயுண்டபின் தாகமென்றார். 260

தாகந்தீர்த்தண்ணீர் நான்கொடுத்தேனென்மேல் மோகங் கொண்டார் நானும் கோபங்கொண்டேன், தானும்வழி கூடியிருட் கானகத்தனில் யானும்வா தந்திவெதும்யானை வந்ததுவே. 261

யானைவருவ தறிந்தவர்பக்கம் போனேனென்கிட்ட வாராதே யென்ற, அவராசையு நிறைவேறிட யுறவாகினேன் பெரிதாகிய யானையுங் கானகஞ் சென்றதுவே. 262

சென்றபின்வேலவ ராறுமுகத்தோடு வந்தனரெந்தனுக் காட்சி யுடன், தெரிசித்திட வேதந்தனர் பரிசுத்தம தாய்நின்றவர் தேன் மொழியாளுள்ள சேதிசொன்னாள். 263

இப்படியென்றொரு வார்த்தைநீமுன்சொன்னால் தப்பிதஞ் சொல்வமோ மாதரசே, இனிதாயொரு மனதாகவே யுனைமேவிய தனதாகிய தெல்லோர்க்குநன்மைதா னென்றுசொன்னார். 264

சந்தோஷமாகவே பாக்கியரிருவருங் கந்தன்மலர்க்கழல் தான் துதித்துச், சரணாகதி யெனவென்றுமே குருநாதனே துணையென் றுமே சாஷ்டாங்கமாகவே தெண்டனிட்டார். 265

தெண்டனிட்டபாக்கி மார்களைப்பார்த்துமே யண்டர்சிறை மீட்ட வேலவரும், தேனார்மொழி மானார்களை யானுமே நானென் றுமே தெரியாமலே நீங்கள் செய்தபிழை. 266

உங்கள்மேல்குற்றங்க ளில்லையடிபாக்கி பெண்களாயெங்க ளிருவருக்கும், உறவாகியே தருவீரெனக் குறவாகியதுரைவேல வன் உண்மையைச்சொல்லவே பாக்கியர்கள். 267

சாடையறிந்து வனம்போனார்கந்தன் பேடைமயில்வள்ளியா ளுடனே, தருணம்மிது தானென்னுமே கருணையுநந்தேடி கூடினர் சந்தோஷமாக விருவருந்தான். 268

வள்ளியைக்கந்தன் மருவியவிக்கதை வாசித்துக்கேட்டு மெழுதி னோர்கள், வேலனரு ளாலேமிக பேறும்பெற சீராகவே வாழ்ந் திருப்பார்கள் மனமகிழ்ந்தே. 269

முருகர் ஒயிற் கும்மி முற்றிற்று.

---

வாணீஸ்வரி அச்சு நிலையம், சென்னை :—30—4—49.

# இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

**விலை ரூபா 3-8-0.**

[ஆசிரியர்: S. S. வாஸன்.]

இதுவரை தமிழ்ப் பதிப்பில் மட்டும் 30,000 பிரதிகள் விற்பனையாகி இருக்கின்றன. இப் புத்தகத்தைக் குறித்து எங்களுக்குத் தினமும் அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் வந்துகொண்டே யிருக்கின்றன. குடும்பஸ்தர் ஒவ்வொருவர்க்கும் இந்நூல் அவசியம் வேண்டுவதாதலால், அறிந்தோர் இந்நூலைத் தம் பந்து மித்திரர்களுக்கு வாங்கிக் கொடுக்கின்றனர். சிலர் கலியாணங்களில் தம்பதிகளுக்கு இந்நூலில் ஒன்றைப் பரிசளிக்கின்றனர். வாழ்க்கையின் இரகசியங்களை அறியாதவருக்கு இல்லறத்தில் இன்பம் இல்லை என்பது நிச்சயம். இப்புத்தகம் கலியாணமானவருக்கும், இனி கலியாணம் செய்து கொள்பவருக்கும் மிகவும் அவசியமானதாகும்.

# சரீர மர்மம் **விலை ரூபா 3.**

ஓர் மானிட மர்ம இன்ப நூல்

[அநேக படங்களுடன்]

இதில் ஸ்திரீ புருஷ லக்ஷணங்களும், அவர்களது மர்ம ஸ்தானங்களின் அமைப்பும், அவைகளின் நேர்மையான உபயோகங்களும், ரதி மன்மத சிங்கார ரகஸ்யங்களும், சம்சார சுகம், குடும்ப ரகசியம், மண வாழ்க்கையின் மர்மங்கள், காதலர் காதலி சரச சல்லாப இன்பங்கள், ஆரோக்கிய சாஸ்திரம், மருத்துவ சாஸ்திரம், சிசு சம்ரக்ஷண சாஸ்திரம் முதலியவும் ஸ்திரீ புருஷர்களுக்கு உண்டாகும் வியாதிகளும், அதைப் போக்கத்தக்க சிகிச்சைகளும், மகா ரிஷிகள் மர்மமாக ஆதியில் எழுதிய இல்லற இன்பங்களும், விவாகமானவர்களுக்கும் இனி மேல் விவாகம் செய்துக்கொள்ளும் சிறுவர் சிறுமியர்களுக்கும் இன்றியமையாத நூல். இந்நூலின் சுவையானது படிப்போரை பிரமிக்கச்செய்து முற்றிலும் படிக்காமல் கீழே வைக்க மனந்துணியாது.

கிடைக்குமிடம்:— ஆர். ஜி. பதி கம்பெனி,
நெ. 4, வெங்கடாராமய்யர் தெரு, மின்ட் போஸ்டு, ஜி. டி. சென்னை.

# வில்லிபாரத வசனம் அல்லது

# மகா பாரத வசன சங்கிரகம்

**விலை ரூபா 5.**

பாரதம் ஆதிமுதல் அந்தம்வரையில் இடையில் எவ்வித உபகதையும் விடாமல் படிக்கத் தெளிய தமிழ் நடையில் தமிழ்ப் பண்டிதரும், 'கம்பநாடர்', ஆசிரியருமான மோ. வே. கோவிந்தராஜ அய்யங்காரவர்களால் புதிய முறையில் எழுதப்பட்டுள்ளது. அநேக அழகிய ஆப்டோன் படங்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. நல்லகிளேஸ் கடிதத்தில் அச்சிடப்பட்டு நூதன முறையில் வெகு அழகாக பைண்டு செய்யப்பட்டிருக்கிறது.

## மகாத்மா காந்தி

# பொன் மொழிகள்

**விலை அணா 12.**

சத்தியத்தையும், அஹிம்சையையும் ஆதாரமாகக்கொண்டு உலகோருக்கு நன்மையே செய்ய அவதாரஞ் செய்து ஆத்மீகத் துறையிலும், அரசியலிலும் ஓயாது உழைத்தவரும் உலகம் போற்றும் உத்தமரான மகாத்மா காந்தி அவர்கள் உபதேசித்து வரும் பொன் மொழிகளை மகா ஜனங்கள் அவசியம் உணர்ந்து கொள்ள வேண்டும் என்ற பெரு நோக்கத்தோடும் நண்பர்கள் வாங்கிப் படித்து மகாத்மா காந்தியவர்களின் தத்துவத்தை உணர்ந்து அதன்படி உய்யவும் இப்புத்தகம் வெளியிடப் பெற்றது.

கிடைக்குமிடம்:— ஆர். ஜி. பதி கம்பெனி,
நெ. 4, வெங்கடாசலப்பர் தெரு, ஜி. டி. சென்னை.

4 ஜாதிவாம்பில்லாமல் ஜனித்திடுவாரென்றும்
சகலமதத்தினோரும் ஒன்றாய்கலப்பாரென்றும்
ஈதலிரக்கக்குணம் யார்க்குமிராதென்றும்
எண்ணம்போனபடி வீணானம்சொன்னீரே
சுருதிகொண்டாரும் உங்கள்முன்னோர்ஜாதி
சொல்கிறேன்கேளும் அந்த

5 முந்தியுகத்தாரென்ன முறையொடேநடந்தது
முதியோரிளையோரென்ற முறையொன்றேயிருந்தது
இந்தயுகத்தாரென்ன இடையூறுசெய்தது
எல்லாஞ்சொன்னாலென்னை பொல்லாதவனென்று
கோபஞ்செய்யாதீர் இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

6 கலியுகங்கலியுக மென்றுகலங்கிக்கொண்டு
காணுந்தொழிலுக்கெல்லாம் நாணிசிரித்துக்கொண்டு
வலியபுளுகிவைத்த வியாசன்கதையைக்கொண்டு
வருத்தத்திளைஞரை பொருத்தவைத்தீர்களே
மிகப்பெரியோரே முந்தியுகத்தைக்கொஞ்சம்
கவனித்துப்பாரே அந்த

7 வசிட்டனார்வசியென்னும் தாசிவயிற்றுப்பிள்ளை
வசிட்டன்சக்கிலிச்சிக்கு வதுவைசெய்மாப்பிள்ளை
புரட்டன்சக்கிலிச்சிக்கும் பிறந்தான்சத்தியமுனி
புலைச்சிக்கும்சத்திக்குப் பிள்ளைபராசரன்
விதமறிவீரே மீன்வலைச்சிமகன்
வியாசனென்பீரே காட்டுக்

8 கலையின்வயிற்றினில் கலைக்கோட்டார்பிறந்ததும்
காராவின்வயிற்றிலே கௌதமருதித்ததும்
புலைச்சிவயிற்றில்ஜாங்கர் பிள்ளையாய்பிறந்ததும்
புளிநாரதர்வண்ணான் வீட்டிற்பிறத்ததும்
நீரறிவீரே பலபலவிதவேத
நூல்தெரிந்தோரே

9 கழுதைவயிற்றினில் காங்கேயர்பிறந்ததும்
காட்டுவேடுவச்சிக்கு வால்மீகர்ஜெனித்ததும்

உ

கடவுள் துணை

# கலியுக சமாதானம்

இராகம்-நாதநாமக்கிரியை, ஆதிதாளம்

## பல்லவி

கோபஞ்செய்யாதீர் இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

## அநுபல்லவி

கோபமகற்றுவிப ரீதபுராணத்தின்
தாபத்தைக்கேளுங்கள் ஞாபகமற்றோரே கோ

## சரணங்கள்

1 தருமத்தையொருபோதும் தாங்கள் நினையாரென்றும்
தஞ்சமென்றடுத்தோரை வஞ்சித்திடுவாரென்றும்
குருபத்தினிமாரை கூட நினைப்பாரென்றும்
கொடுத்தகடனைகேட்டால் அடிக்கத்துணிவாரென்றும்

கதைகட்டினீரே முந்தியுகத்தாரை
பதத்தில்வைத்தீரே இன்னும்

2 அடுத்தோரைவஞ்சித்து ஆஸ்திசேர்ப்பாரென்றும்
அளவுக்குமிஞ்சின ஸ்ரீயைப்புணர்வாரென்றும்
கடுத்தமனக்குறி கல்மனத்தாரென்றும்
கலியுகத்தால்நல்ல நெறிநடவாரென்றும்

வீண்கதைகட்டி கதைகள்புராணத்தை
விபரீதமாக்கி

3 முறைவறையில்லாமல் மோடிசெய்வாரென்றும்
முன்பின்யோசிக்காமல் தன்னைமதிப்பாரென்றும்
மறைமனுசாஸ்திர விதிகடப்பாரென்றும்
மற்றவீண்கதைகளே மெத்தபடிப்பாரென்றும்

புலம்பிவிட்டீரே கலியுகச்சிறுவரை
கலங்கவிட்டீரே

பழுதுற்றபிறவியால் பைரவன்கெற்பத்தில்
பகரும்ஜம்புகர் ஜெளனகர்பிறந்ததும்
பாரறியாதோ யாரில்லையென்றாலும்
கருதிசொல்லாதோ

10 மாண்டவ்யர்த்தவக்களை மைந்தனைப்பிறந்ததும்
மாதங்கர்சக்கிலிக்குச் சுதனாகவந்ததும்
நீண்டசிலை அவ்வத் தாமன்பிறந்ததும்
நீரறியீரோ குதிரைவயிற்றிலின்றும்
இதுகலியுகமா இவ்வாறுஜெனித்தமோ
இயம்பு நீநிஜமா அந்த

11 சுதருக்குக்கிளிமூக்குச் சுருதியுஞ்சொல்லாதோ
சூரரனேகர்கள் மிருகம்போலில்லையோ
பகரும்பதஞ்சலி வியாக்கிரமரறியீரோ
பாரதகோரங்கள் யாருக்குந்தெரியாதோ
கோபஞ்செய்யாதீர் இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

12 விதியிருந்தொருமாது விபசாரஞ்செய்தாலும்
வினைப்பயனிருந்தங்கே கணவனைப்பிரிந்தாலும்
சதிசெய்தாள்கண்டீரோ சண்டாளக்கலியுகம்
சேஷ்டைகள்ஒன்றுமே காட்டாதுபாரென்று
விதிமறந்தீரோ யுகத்தையிழுத்துக்கொண்டு
மதிமறந்தாயோ முந்தி

13 அகலிகையிந்திரனை அணைந்ததுசரிதானோ
ஆரியர்பத்தினி தாரையென்பவள்தானோ
வலுவிலேசந்திரனை அணைந்தது முறையாமோ
அறிவுள்ளபெரியோரே தெரியாமற்கேட்கிறேன்
கோபஞ்செய்யாதீர் இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

14 பூர்க்குமுன்குந்தியும் பிள்ளையைப்பெற்றாளே
பத்தினி துரோபதை கர்ணனைமதித்தாளே
வேர்கொண்டுசித்ராங்கி விபரீதம்விளைத்தாளே
விஜயனைபார்வதி மனதுக்குள் நினைத்தாளே

அதுநல்லயுகமோ
ஏன்கெட்டயுகமோ
கலியுகமாத்திரம்
ஐயா

15 மாமியுடைத்தது
மருமகளுடைத்தது
சாமிக்குமேகுரு
சங்கதிபோலநீர்
கோபஞ்செய்யாதீர்
தோஷஞ்சொல்லாதீர்
மண்குடமுங்கொண்ட
பொன்குடமாமென்று
சாமிகள்சொல்கிற
எங்கள்மீதுவீணாய்
இதுகலியுகமென்று

16 ஆடவருடனொரு
அவளைவைத்துக்கொண்டான்
நாடுமறியுமிதை
நம்பிக்கையோடுறை
மறந்துபோனீரோ
புணர்ந்தார்காணீரோ
அமங்கிலிபேசினால்
அதனைகரைத்துபோட்டான்
நானுந்தெரிவேனென்று
வம்புசெய்பெரியோரே
வியாசன்முண்டச்சியை

17 விச்சித்திரவீரியன்
வனிதையம்பாலிகை
துஷ்டனானவியாசன்
துவாபரயுகத்திருத
அவன்பிள்ளையாமே
பரம்பரையாமே
வதுவைசெய்துக்கொண்டு
யம்பிகையெனுமாதை
இஷ்டப்படுத்திக்கொண்டு
ராட்டிரன்பாண்டுவும்
பாண்டவர்குலம்வியாசர்

18 இந்தப்படிக்கிமுந்தி
இருக்கக்கலியுகம்
தொந்தப்படுத்திதுஷ்ட
னாறுசொல்லிவந்த
கோபஞ்செய்யாதீர்
தோஷஞ்சொல்லாதீர்
யுகத்திலனேகமாய்
யிதைமாத்திரம்வீணாய்
தொழில்கள்நடக்குமென்று
பேரில்பெரியோரே
இதுகலியுகத்தில்மட்டும்

19 பிருகுரிஷியென்பவன்
பரசுராமன்தாயைச்
பப்ரவாகனன்பெற்ற
பிரமன்குமாரனைத்
ஏன்பெரியோரே
நடக்குமென்றீரே
மாதாவைக்கொன்றானே
சிரச்சேதஞ்செய்தானே
தந்தையைவதைத்தானே
தானேஜபித்தானே
கலியுகத்தில்மட்டும்

7 கதவிலிடித்துக் கலிதமான விந்தை - கலசமுனி யும் பிறந்தானென்று, மதத்தைநிறுத்தும் முனிகள் சொன்னமொழி, மண்டலங்காண வுரைத்தனன்யான்.

8 முந்தியுகமே இவ்வாறிருக்க வடி-மொய்குழலே நமக்கெப்படியாம், இந்த யுகமட்டும் துஷ்ட நடக்கை யென் றெப்படி சொல்லுவார் இப்புவியோர்.

9 அத்திரிமாமுனி பத்தினியா மந்த - அனுசூயை யென்கிற வுத்தமியை, நத்திப்புணர்ந்திட வேணுமென்று பர மேசுரன்பிரமனும் நாராயணன்.

10 மூவரும்பிராம்மண வேஷமிட்டுவெகு, மோக மாகமுனி வீடுவந்து, ஆவலாகப்பிச்சை போடுமம்மா வென்று அந்தணர்போலவே நின்றனராம்.

11 அந்தணர்பிச்சைக்கு வந்தனரேயென்று-அனு சூயையம்மை அமுதெடுத்து, இந்தாருமையா யென வளிக்கயிவர் என்னென்றுரைத்தாராம் கன்னியிடம்.

12 கச்சுகலையுங் களைந்துநிர்வாணமாய் - கண்ணு க்கு முன்னாலே வந்துநின்றால், இச்சையான பிச்சை யதுவே போதுமென் றின்பவபிநயங் காட்டினராம்.

13 இம்மொழி காதினில் கேட்டுரிஷிமாது-யாரடா போக்கிரி பையலென்று, பொம்மைகள்போலவே மூவ ரையுஞ்சிறு பிள்ளைகளாகச் சபித்துவிட்டார்.

14 சேயுருவாக கிடத்திடவுமப்போ - சிருஷ்டி சங் காரம் தடைப்படவும், ஆராய்ந்து நாரத மாமுனிவன் கண்டு அநுசூயையம்மனைத் தானடுத்து.

15 மெத்தவுந்தீவிர மோடிவந்துரிஷி - பத்தினி காலில் மிகப்பணிந்து, புத்தியில்லாததோர் பிழைபொரு க்கநல்ல உத்தமர்க்கன்றியார் சொல்லுமம்மா.

16 மூவரின்சாபம் விலக்கவேண்டி முனி - முடியா மல்கன்னிப் பதம்பணிந்து, ஔவைமதியைத் திருப்பின தாலன்றே ஓடினார்மூவ ருலகமடி.

20 திரேதாயுகத்துதிரிச் சங்குகுருவோடையோ
திறமாயெதிர்த்தும்போ ராடினைதுபொய்யோ
போரிற்பெரியவீஷ்மாச் சாரிதன்குருவான
பரசுராமனைப்படு களத்திலடித்தானே
இதுஞாயந்தானோ நாங்கள்செய்தால்மட்டும்
வன்குற்றமாமோ

21 சிறியமனிதர்செய்யும் சிறுபிழையொட்டுக்கும்
ஜென்மங்கள்பலவாருய் ஜெனித்துபின்கிட்டிக்கும்
அரியரிஷிகள்தேவர் அறிந்துசெய்குற்றத்திற்
கவரென்னஜென்மங்க ளடைந்தாரோசொல்லுங்கள்
கோபஞ்செய்யாதீர் இதுகலியுகமென்று
தோஷஞ்சொல்லாதீர்

## கும்மி

1 மாலுமயனரன் தேவர்களும் வெகு - மாக்ஷமை பெற்ற தபோதனரும், நாலுயுகத்தில் நடந்தசெய்தி சொல்ல - நங்கையே நீங்களும் வாங்களடி.

2 தன்கரத்தாலே படைத்திட்ட ஊர்வசி - தன்னழகைக் கண்டு பிரமனவன், உன்னிதமான கலைமானுருக் கொண்டு ஓடிப்புணர்ந்தானும் நியாயமாசொல்.

3 இப்பெருங்குற்ற மதைப்பார்த்து பர - மேசுரன் பிரம்மா வினைத்தடுத்து, தப்பிதமென்ற வனைத்துசிரசிலோர் தலையையறுத்தாராம் நிலைகுலைய.

4 பிரதிதிலோர்த்தமை தன்னைசிருஷ்டித்து - பேதைமதிதயல் தான்பார்த்து, எந்தவிதமும் புணரவேண்டுமென்று எகித்துரத்தினான் போகியவன்.

5 முந்தி திலோர்த்தமை யோடிடவுமவன் - பிந்திபிரமன் துரத்திடவும், இந்திரன் கோட்டையில் போய்ப் புகுந்து அவன் ஏமாந்துநின்றான் காமந்தன்னால்.

6 கன்னியுஞ் சென்று கதவடைக்க யிவன் - கண்ணுந்தெரியாம லோடிடவே, தன்னிளமாரிக் கதவிடிக்கவும் தரையிலேகாமம் விடுத்தனர்பார்.

17 மூவரின்புத்தியிவ் வாறிருக்கச் சுத்த-மூடர் தமக்கு யெவ்வாறிருக்கும், எவ்விதமிந்தக் கலியுகங் கெட்டதென் றேதுக்குரைக்கிருர் பாதகர்கள்.

18 பிருகுரிஷி பெண்சாதி நாகவல்லுயம்மை-பின் னுமழகா யிருப்பாளென்று, திரிமூர்த்திகளவர் சென்று கற்பழிக்க சேஷ்டைகள்செய்தாராம் வேஷ்டையுடன்.

19 மெல்லிமனது மிகக்கொதித்து-மெத்தவுந்துட் டப் பயல்களென்று, பிள்ளைகளாக வுருப்படுத் தியிவரை பிரட்டிமூலையில் தள்ளிவிட்டாள்.

20 ஆதியில்தேவர்க் கமுதனிக்கமாயன் - அற்புற மோகினி யாய்ஜொலிக்க, ஆதிசிவனும் விரகங்கொண் டங்ஙனே ஆயனைக்கூடிக்கலந்தனர்பார்.

21 அரியுமரனுமனுபவித்தவுடன் - அரி அரனெ ன்கிறபேர்வகித்து, பிரியமாயொரு பிள்ளையும் பெற்ருரே பின்னையுஞ்சாட்சிகள் வேணுமோசொல்.

22 தவத்தில்மிகுந்த வெண்ணுயிரம் பேரந்த-தாரு காவனத்துப் பெண்டுகளை, சிவனுமரியுமாய் செய்தவிப ரம் சீமையரியாதோ செல்வர்களே.

23 இத்தனைதேவர் நடந்திருக்கபின்னும் எத்தனை வேந்தர் நெறிபிரள, சித்துளவாழ்க்கை மானிடர்மீதிலே சொல்லுவதேன் குற்றம் வல்லவரே.

24 தான்பெற்றபிள்ளையும் நூறுபேர்க்குமதி-தான் சொல்லிபுத்திதிருந்தாமல், ஏஞேசண்டாளராய்ப்போங்க ளென்றுசாபம் இட்டான்வசிட்டனுங் குற்றமென.

25 பிள்ளையைத்தந்தை செபிக்கலையா பெற்ற - தந் தையைப்பிள்ளை எதுக்கலையா, மைந்தனைத்தந்தை வதைக்கலையா தேவர் மர்மந்தெரியாதோ சொல்லுமையா.

26 குருவிலொருகுரு துரோணச்சாரியை குந்திமக் கள்பஞ்ச பாண்டவர்கள், தருமநெறியாரோ குருவைக் கொலைசெய்தார் தன்மையாய்பாரதம் பார்தெரியும்.

27 மாலின்பெண்டாட்டியோ மார்பினிலே மறை-வேதன்பெண்டாட்டியோ நாவுக்குள்ளே, ஆலத்தையுண்டசிவனிட பெண்டாட்டி ஐயோசிரசில் குடிபுகுந்தாள்.

28 இப்படிதேவர் சுமந்திருக்க யிந்த - ஏழைமனிதற்கே நேமமென்று, எப்படிவேத புராணங்கள் சொல்லுது எனென்றுகேள்கவி வாணரே நீர்.

29 கட்டுகதையு முறைக்கவில்லை கவி - காலகுணத்தையுங் காட்டவில்லை; பெட்டகம்போல முன்னோர்கள் வைத்தகதை பூமியறிய வுரைத்தனன்பார்.

30 ஜீவிக்கமந்திரம் செய்துந்தந்ததன்றி தேவதையேளனஞ் செய்யவில்லை, பாவிபயலென்று யென்னை தூஷிக்காதீர் பாவலர்க்கெல்லாஞ் சரணமையா.

31 கருணை குணந்தஞ்சை பெரியசாமிப்பிள்ளை - கனிந்துசொன்ன மொழிப்படியே, சிறுமணலூர் முனிசாமிசொன்னகவி தேசப்புலவோர் பிழைபொருப்பீர்.

கலியுகசமாதானம்

முற்றிற்று.

---

வாணீவிலாஸ் அச்சு நிலையம், ஜி. டி. சென்னை. (22–11–49)